## ஒதுக்கீட்டுத் தலைப்பு 145 – மீள் குடியேற்ற அமைச்சு
## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மீள் குடியேற்ற அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 21 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மீள்குடியேற்ற அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.9

வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 635,497,555 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 545,902,171 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 89,595,384 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 14 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டு வருபவை | 272,555,000 | 225,905,000 | 25,773,688 | 11 |
| மூலதனம் | 209,050,000 | 409,592,555 | 63,821,696 | 15 |
| மொத்தம் | 481,605,000 | 635,497,555 | 89,595,384 | |

**(ii) பாதீட்டு முரண்**

(அ) செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 400,000 தொகையான தேறிய மூலதன ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 12 செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 23 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

14501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 4,000,000 | 3,567,003 | 2,500,000 | 5,534,756 | 13,000,000 | 9,110,270 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 14501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 184,520 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதற்கு 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுப்பதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண மீதிகளைக் காட்டும் தனியான கணக்கு மீதிகளின் பட்டோலை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 11,635,219 ஆக காணப்பட்டது.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர்

நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று அமைச்சினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2011 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை இது 2012 யூலை 31 ஆந் திகதியன்றே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நி.பி 104 | - | இழப்புக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 03 வாகன விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 110 | - | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி. 371(2)(ஆ) | 819,318 | அமைச்சின் உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படுகின்ற முற்பணங்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 20,0000 இனை விஞ்சாதிருக்க வேண்டிய போதிலும், அதற்கு இணங்காது 17 சந்தர்ப்பங்களில் எல்லையினை |

| | | |
|---|---|---|
| | | மீறி முற்பணமாக ரூபா 819,318 செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) நி.பி. 371(2)(இ) | 914,318 | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் கருமம் முடிவுற்றவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 24 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 914,318 கூட்டுத்தொகையான முற்பணங்களைத் தீர்ப்பதற்கு 01 மாதம் முதல் 07 மாதங்கள் வரை தாமதிக்கப்பட்டிருந்தது. |
| (v) நி.பி. 1646 | - | மாதாந்த ஓட்டக் குறிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |
| (vi) நி.பி. 1647(ஆ) | - | வாகனங்கள் மற்றும் அதற்கான உபகரணங்கள் மீதான முழுமையான மெய்மையாய்வு வருடந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | 114,617,018 | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப் பட்டிருக்கவில்லை. |

### 1.6 செயலாற்றல்

2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக அநுராதபுரம் மாவட்டத்தின் வெலிஓய கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெயர்ந்த மற்றும் இன்னல்களிற்கு ஆளான 500 குடும்பங்களிற்காக 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டின் யூலை மாதத்தில் அமைச்சினால் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 150 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் மீளாய்வாண்டில் ரூபா 149.90 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் மர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி, 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூரணப்படுத்தப்பட்டிருந்த வீடுகளின்

எண்ணிக்கை 06 ஆகவும் பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை 465 ஆகவும் காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 102.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 1.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சிற்குரிய ஓர் ஜீப் வாகனம் 2011 செப்தெம்பர் 05 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி திருத்துவதற்காக விலைமனுக் கோரல்களை மேற்கொள்ளாது தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 3,500,000 ஆக காணப்பட்டது. இந்த ஜீப் வாகனத்தின் திருத்தும் நடவடிக்கைகள் 2013 யூலை 31 ஆந் திகதி வரை முடிவடையாதிருந்ததுடன் அக் கம்பனிக்கு ரூபா 700,000 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 1.8 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 07 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | - | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 84 | 66 | 18 |
| (iv) | ஆரம்ப நிலை | 27 | 21 | 06 |
| | மொத்தம் | 126 | 94 | 32 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 32 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.